பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

19 01 2026 MONDAY 12 40 AM

ஆகாஷவாணி - செய்திகள்
தலைப்புச் செய்திகள்

1. பேரிடர் காலங்களில் தேசிய பேரிடர் மீட்பு படையினரின் பணி மகத்தானது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டியுள்ளார்.
2. வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார சட்டம் குறித்து, காங்கிரஸ் கட்சி தவறான தகவல்களை பரப்பி வருவதாக மத்திய அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் குற்றம் சாட்டியுள்ளார்.
3. இந்தியாவில், தனிநபர் வருமானம் 2030-ஆம் ஆண்டுக்குள் நான்காயிரம் டாலர் என்ற அளவை எட்டும் என்று பாரத ஸ்டேட் வங்கி தெரிவித்துள்ளது.
4. நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உண்மையான தகவல்களை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்று சென்னை அகில இந்திய தொழில்நுட்ப கல்விக் கழக இயக்குநர் திரு. காமகோடி கேட்டுக் கொண்டுள்ளார்.
5. தமிழகத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க 13 லட்சத்து மூவாயிரத்து 487 பேர் விண்ணப்பித்துள்ளதாக மாநில தலைமை தேர்தல் அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக் கூறியுள்ளார்.

>>>>><<<<<<

தேசிய பேரிடர் மீட்புப் படையின் உதய தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

2006ஆம் ஆண்டு இதேநாளில் தொடங்கப்பட்ட தேசிய பேரிடர் மீட்புப் படை, இதுவரை ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மழை - வெள்ளம், நிலச்சரிவு, நிலநடுக்கம் உள்ளிட்ட இயற்கை பேரிடர்களை மிகச் சிறந்த முறையில் கையாண்டு, லட்சக்கணக்கான மக்களின் உயிரையும், அவர்களின் உடமைகளையும் பாதுகாக்கும் உன்னத பணியை இந்த படை மேற்கொண்டு வருகிறது.

நாட்டில் 68 இடங்களில் தனது சிறப்பான பணியை மேற்கொண்டு வரும், தேசிய பேரிடர் மீட்புப் படையில் 16 படைப்பிரிவுகள் உள்ளன.

அதிக அளவு பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதிகளை கருத்தில் கொண்டு, இப்படையின் மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

பேரிடர் காலங்களில் விரைந்து பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று, மீட்புப் பணிகளை மேற்கொள்ளும் வகையில், இதற்கான மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த நாளையொட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி, விடுத்துள்ள சமூகவலைதள பதிவில், தேசிய பேரிடர் மீட்பு படையினருக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

இடர்பாட்டு காலங்களில் மீட்புப் பணிகளில் நன்கு தேர்ச்சி பெற்ற வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் சிறப்பாக தங்களது கடமையை ஆற்றி வருவதாகவும், அவர்களுக்கு தமது மனம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதாகவும் கூறியுள்ளார்.

பேரிடர் குறித்த தகவல் கிடைத்த உடனேயே, அந்த இடத்திற்குச் சென்று உயிர்களையும் உடமைகளையும் பாதுகாத்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கும் பணியை செய்து வரும் இப்படையினரின் கடமை உணர்வு, உயர்தரத்திலான சேவையை வெளிப்படுத்துவதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த பத்தாண்டுகளில், தேசிய பேரிடர் மீட்புப் படை எப்போதும் தயார் நிலையில் இருந்து அரும்பணியாற்றி வருவதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள செய்தியில். பேரிடர் காலத்தில் விரைந்து செயல்பட்டு, நாட்டின் நம்பிக்கையாக தேசிய பேரிடர் மீட்புப் படை திகழ்வதாக குறிப்பிட்டுள்ளார்.

மீட்புப் பணியின் போது தங்கள் இன்னுயிரை தியாகம் செய்த வீரர்களையும், வீராங்கனையும் இந்நாளில் வணங்குவதாகவும் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார சட்டம் குறித்து, காங்கிரஸ் கட்சி மக்களுக்கு தவறான தகவல்களை அளித்து வருவதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவ்ராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இத்திட்டத்தின் பயனாளிகள் முன்னர் 100 வேலைநாட்கள் பெற்று வந்ததாகவும், தற்போது புதிய சட்டத்தின் அடிப்படையில் 125 நாட்கள் பணி அளிக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தையும், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு சிறப்பாக செயல்படுத்தியதாகவும், 25 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் ஏழ்மை நிலையிலிருந்து மீட்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இதனை வலுப்படுத்தும் நோக்கிலேயே, புதிய சட்டம் கொண்டு வரப்பட்டு, காலதாமதம் இன்றி கூடுதல் வேலைநாட்களை அளிக்க வகை செய்யப்பட்டுள்ளதாகவும் திரு. சிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்தார்.

>>>>><<<<<<

இந்தியாவில், தனிநபர் வருமானம் 2030-ஆம் ஆண்டுக்குள் நான்காயிரம் டாலர் என்ற அளவை எட்டும் என்று பாரத ஸ்டேட் வங்கி தெரிவித்துள்ளது.

அந்த வங்கி இன்று வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில், நடுத்தர வருவாய் பிரிவினர், உயர் நடுத்தர வருவாய்ப் பிரிவிற்கு செல்வது அதிக அளவில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு சுதந்திரம் அடைந்து, 60 ஆண்டுகளில், ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரமாக உருவெடுத்தது என்று குறிப்பிட்டுள்ள பாரத ஸ்டேட் வங்கி, 2007ஆம் ஆண்டிலிருந்து 2014ஆம் ஆண்டுக்குள் விரைவான வளர்ச்சி பெற்று, 2 ட்ரில்லியன் டாலர் பொருளாதாரமாக 7 ஆண்டுகளில் உயர்ந்ததாகவும் தெரிவித்துள்ளது.

2021ல் 3 ட்ரில்லியன் பொருளாதாரமாக உயர்ந்துள்ள இந்தியா, அடுத்த 4 ஆண்டுகளில் 4 ட்ரில்லியன் டாலர் என்ற அளவை எட்டியுள்ளதாகவும் அந்த வங்கி கூறியுள்ளது.

வரும் இரண்டாண்டுகளிலேயே 5 ட்ரில்லியன் டாலர் பொருளாதாரமாக இந்தியா உயரும் என்று உலகளாவிய பொருளாதார மதிப்பீடுகள், கூறுவதாக பாரத ஸ்டேட் வங்கி குறிப்பிட்டுள்ளது.

>>>>><<<<<<

ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த சுதந்திரப் போராட்ட தியாகி பார்வதி கிரி-யின் பிறந்த நாள் நூற்றாண்டை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி அன்னாருக்கு புகழாரம் சூட்டியுள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், ஆங்கிலேய ஆதிக்கத்தை முடிவுக்கு கொண்டு வர, சுதந்திரப் போராட்ட இயக்கத்தில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் என்று குறிப்பிட்டுள்ளார்.

சமூகப் பணியில் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட பார்வதி அம்மையார், மகளிருக்கான அதிகாரம், மருத்துவம் உள்ளிட்ட பல துறைகளிலும் அரும்பணியாற்றியவர் என்று கூறியுள்ளார்.

அகில இந்திய வானொலியில் கடந்த மாதம் ஒலிபரப்பான மன்கிபாத் நிகழ்ச்சியில், வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் 16 வயதில் பார்வதி கிரி தம்மை இணைத்துக் கொண்டார் என்று பிரதமர் குறிப்பிட்டார்.

(சவுண்ட் பைட் – பிரதமர் 54 செகண்ட்ஸ்)

>>>>><<<<<<

அகில இந்திய சட்டப்பேரவை தலைவர்கள் மாநாடு, இன்று உத்தரபிரதேச மாநிலம், லக்னோவில் உள்ள சட்டப்பேரவை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா தொடக்கவுரையாற்றவுள்ளார்.

இம்மாநாட்டில், மாநில - யூனியன் பிரதேச சட்டப்பேரவைத் தலைவர்கள், சட்டப்பேரவை செயலாளர்கள் மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர்கள் கலந்து கொள்கின்றனர்.

நாடாளுமன்ற நடைமுறைகள், சிறந்த அரசு நிர்வாகம், தற்போதுள்ள அவை நடவடிக்கைகள் குறித்த முக்கிய விஷயங்கள் குறித்தும் இம்மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ளது.

மாநிலங்களவை துணைத்தலைவர் திரு. ஹரிவன்ஸ் உள்ளிட்டோர் இம்மாநாட்டில் உரையாற்றவுள்ளனர்.

>>>>><<<<<<

நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உண்மையான தகவல்களை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்று சென்னை அகில இந்திய தொழில்நுட்ப கல்விக் கழக இயக்குநர் திரு. காமகோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னையில் ஐ.ஐ.டி ஏற்பாடு செய்திருந்த ஊடக தகவல்களின் உண்மைத்தன்மை குறித்த பயிலரங்கில் பேசிய அவர், போலியான செய்திகளை அடையாளம் கண்டு, அவற்றை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்.

சமூகவலைதளத்தில் 20 முதல் 30 வினாடிகளுக்குள் உலகம் முழுவதும் தகவல் சென்றடைவதாக கூறிய அவர், தவறான தகவல்களை உடனடியாக தடுக்க வேண்டியது அவசியமாகிறது என்று குறிப்பிட்டார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, அரசின் தகவல்கள் மற்றும் அறிவிப்புகளை உடனுக்குடன் மக்களிடம் கொண்டு சேர்க்கலாம் என்றும் அவர் ஆலோசனை கூறினார்.

மத்திய அரசின் பத்திரிகை தகவல் அலுவலகம் இப்பணியை சிறப்பாக செய்து வருவதாக திரு. காமகோடி பாராட்டினார்.

>>>>><<<<<<

*தமிழகத்தில் வாக்காளர் பட்டியலில் புதிதாக பெயர் சேர்க்க 13 லட்சத்து மூவாயிரத்து 487 பேர் விண்ணப்பித்துள்ளதாக மாநில தலைமை தேர்தல் அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.*

*அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்குவதற்கு 35 ஆயிரத்து 646 விண்ணப்பங்கள் வரப் பெற்றுள்ளதாக கூறியுள்ளார்.*

*மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கு பிறகு, கடந்த மாதம் 19ஆம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்ட நிலையில், அடுத்த மாதம் 17ஆம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படவுள்ளது.*

**>>>>><<<<<<**

*ஜம்மு கஷ்மீரின் கிஸ்துவார் மாவட்டத்தில் பதுங்கியுள்ள தீவிரவாதிகளை தேடும் பணியை பாதுகாப்பு படையினர் இரண்டாவது நாளாக தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.*

*Chatroo பகுதியில் அமைந்துள்ள சோனார் என்ற கிராமத்தில், நேற்று முதல் தீவிர தேடுதல் பணியை அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.*

*அடர்ந்த - புதர் நிறைந்த பகுதியாக இருப்பதாகவும், கடுமையான பணிமூட்டம் நிலவுவதாலும், தேடுதல் பணி பெரும் சவாலாக அமைந்துள்ளது.*

*ராணுவத்தினர், துணை ராணுவத்தினர், உள்ளூர் காவல் படையினர் இணைந்து மேற்கொள்ளும் இப்பணியில் மோப்ப நாய்களும், ட்ரோன்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.*

**>>>>><<<<<<**

*மஹாராட்டிர மாநிலம், Nashik மாவட்டம், Malegaon-Manmad நெடுஞ்சாலையில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் 4 பேர் உயிரிழந்தனர். 20க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.*

*அதிகாலை 3 மணியளவில் Varhane என்ற இடத்தில் தனியார் பேருந்து எதிரே வந்த வாகனத்தின் மீது மோதியதில் இந்த விபத்து நேரிட்டது.*

*காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.*

*இந்த விபத்து குறித்து விசாரணை நடைபெற்று வருவதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.*

**>>>>>END<<<<<<**